# 2 ஹலோ........!

**செவிமடுப்போம், சோடிகளாக சேர்ந்து உரையாடுவோம்.**

**உரையாடல் 1**



**மோகன் :**
ஹலோ வணக்கம்

**அம்மா :**
வணக்கம். நீங்கள் யார்?

**மோகன் :**
நான் மோகன்.
திருகோணமலையில்
இருந்து.

**அம்மா :**
ஆ! மோகன், எப்படிச்
சுகம்.

**மோகன் :** நல்ல சுகம் அம்மா. கண்ணன் அண்ணா
இல்லையா? கதைக்க முடியுமா?

**அம்மா :** அவர் இல்லை. வெளியே போய்ட்டார்.

**மோகன் :** அவர் எங்கை போனார்?

**அம்மா :** கோயிலுக்கு.......

**மோகன் :** அவர் எப்ப வருவார் அம்மா?

**அம்மா :** சொல்ல முடியாது தம்பி.

**மோகன் :** எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா அம்மா?

**அம்மா :** என்ன உதவி?

**மோகன் :** மோகன் கதைச்சார் எண்டு சொல்லுங்க.

**அம்மா :** சரி மோகன்.

**மோகன் :** நன்றி அம்மா.

**அம்மா :** நன்றி.



## செயற்பாடு - 01

1. தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் யார்?
2. அவர் எந்த ஊரில் இருந்து தொடர்பு கொண்டார்?
3. மோகன் கதைக்க விரும்பியவர் எங்கே சென்றுள்ளார்?

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| யாரோட | யாருடன் / யாரோடு |
| வேணும் | வேண்டும் |
| போய்ட்டார் | போய்விட்டார் |
| எப்ப | எப்போது / எப்பொழுது |
| சொல்லுங்க | சொல்லுங்கள் |
| கதைச்சார் | கதைத்தார் |
| எண்டு | என்று |
| கதைக்கிறீங்க | கதைக்கிறீர்கள் |

### சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| இல்லையா? | - | නැද්ද? |
| முடியுமா? | - | පුළුවන්ද? |
| எங்கை / எங்கே | - | කොහෙද? |
| போய்ட்டார் | - | ගිහින් / ගියා |
| கோயிலுக்கு | - | කෝවිලට |

## உரையாடல் - 2

| | | |
|---|---|---|
| **மாணவத்தலைவர்** | : | ஹலோ வணக்கம். |
| **வரவேற்பாளர்** | : | வணக்கம் யார் கதைக்கிறீங்கள்? |
| **மாணவத்தலைவர்** | : | நான் நாவலர் வித்தியாலய மாணவத் தலைவர். |
| **வரவேற்பாளர்** | : | உங்களுக்கு என்ன உதவி வேணும்? |
| **மாணவத்தலைவர்** | : | கண்காட்சி பற்றிய விபரம் அறிய வேணும்? |
| **வரவேற்பாளர்** | : | என்ன விபரம்? |
| **மாணவத்தலைவர்** | : | கண்காட்சி எப்போது ஆரம்பமாகும்? |
| **வரவேற்பாளர்** | : | அடுத்த மாதம் முதலாம் திகதி. |
| **மாணவ தலைவர்** | : | எப்போது முடிவடையும். |
| **வரவேற்பாளர்** | : | அடுத்த மாதம் 10 ஆம் திகதி. |
| **மாணவத்தலைவர்** | : | பார்வையிடக் கூடிய நேரம் என்ன? |
| **வரவேற்பாளர்** | : | காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை. |

**மாணவத்தலைவர்** : பிரவேசக் கட்டணம் எவ்வளவு?

**வரவேற்பாளர்** : பிரவேசக் கட்டணம் 300/= பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு.

**மாணவத்தலைவர்** : அனுமதிச் சீட்டுக்களை எங்கே பெறலாம்?

**வரவேற்பாளர்** : வரவேற்பாளரிடம் பெறலாம். அல்லது கண்காட்சி மண்டப வாயிலில் பெறலாம்.

**மாணவத்தலைவர்** : விபரங்களைத் தந்து உதவியமைக்கு நன்றி.

**வரவேற்பாளர்** : தொடர்பு கொண்டமைக்கு நன்றி.

## செயற்பாடு - 02

1. உரையாடலில் பங்கு பற்றியவர்கள் யார்?
2. அவருக்குத் தேவையான விபரங்கள் யாவை?
3. கண்காட்சி எத்தனையாம் திகதி ஆரம்பமாகும்?
4. கண்காட்சியின் அனுமதிக் கட்டணம் எவ்வளவு?
5. கண்காட்சி எத்தனை மணிக்கு ஆரம்பமாகும்?

## செயற்பாடு - 03

**பொருத்தமான வினாச் சொற்களைக்கொண்டு வாக்கியங் களைப் பூரணப்படுத்துங்கள்.**

**(யாருடன், ஏன், எவ்வளவு, எப்போது, என்ன, எங்கே, எப்படி, யாவர்)**

1. மாலா ____________________ வரவில்லை?
2. ____________________ விபரம் வேண்டும்?
3. கண்காட்சி ____________________ ஆரம்பிக்கப்படும்?
4. ____________________ கண்காட்சி முடிவடையும்?
5. பிரவேசக் கட்டணம் ____________________?
6. அவர் ____________________ போனார்?
7. உங்கள் பெயர் ____________________?
8. பாடசாலைக்கு ____________________ வந்தீர்கள்?
9. பன்சலைக்கு ____________________ போவீர்கள்?
10. நீங்கள் ____________________ கதைக்க வேண்டும்?
11. உரையாடலில் பங்குபற்றியவர்கள் ____________________?

## செயற்பாடு - 04

மேற்படி வாக்கியங்களைப் பூரணப்படுத்திய பின்பு சோடிகளாக இணைந்து ஒருவர் வினா எழுப்ப மற்றவர் விடையளியுங்கள்.

## செயற்பாடு - 05

**தரப்பட்டுள்ள வினாச் சொற்களைப் பயன்படுத்திச் சிறு சிறு வினா வாக்கியங்கள் ஆக்குங்கள்.**

**(என்ன, ஏன், எப்படி, எவ்வாறு, எப்பொழுது, யார், யாருக்கு, எங்கே, யாருடன்)**

______________________________________

______________________________________

## செயற்பாடு - 06

மாணவர் இருவர் கொண்ட சோடிகளாகி விரும்பிய தொலைபேசி உரையாடல் ஒன்றை எழுதுங்கள்.

## செயற்பாடு - 07

எழுதிய உரையாடலை அடிப்படையாகக்கொண்டு வகுப் பறையில் பேசிக் காட்டுங்கள்.

## செயற்பாடு - 08

1. புகையிரத நிலைய அதிகாரியுடன் பின்வரும் சொற்களை உள்ளடக்கிய உரையாடல் ஒன்றை எழுதுங்கள்.
   **வணக்கம், தயவுசெய்து, உதவி, எத்தனை மணிக்கு, கட்டணம், எவ்வளவு, புறப்படும், பயணச்சீட்டு.**

2. சோடிகளாக இணைந்து உரையாடுங்கள்.